பேராசிரியர்கள் போன்றவர்களை எடுப்பதற்கு வாய்ப்பு உண்டா? அப்படி வாய்ப்பு உண்டு என்று சொன்னால், பணச் சுமையை எப்படி நீங்கள் adjust செய்யப் போகிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது கல்லூரிகளில் நடைமுறையில் உள்ள வகுப்புகளுக்கு மாறாக Shift System மூலம் புதிய பாட வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகிறபோது அவர்களுக்கு கூடுதலாக ஆசிரியர்கள் தேவைப்படுகிறது. அதற்கு Hourly Basis, மணிக்கு இவ்வளவு தொகை— மணிக்கு 100 ரூபாய் — என்கிற அளவிலே ஆசிரியர்கள் நியமிக்கபபடுகிறார்கள். அதிலும் குறிப்பாக Self-financing course, இன்னும் சொல்லப்போனால் Job Oriented Course போன்றவைகளுக்குத்தான் இப்பொழுது நாம் கல்லூரிகளிலே மாலை நேர வகுப்புகள் Shift System-லே ஆரம்பிக்கிறோம். அதற்குரிய கட்டணத்தைக் கொடுத்து மாணவர்கள் சேர்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே அந்த வருமானத்தைக் கொண்டு ஆசிரியர்களை Hourly Basis-ல் மணிக்கு 100 ரூபாய் என்கிற அந்த அடிப்படையிலே கூடுதலாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு பாடம் நடத்துவதற்கு எந்தவித பிரச்சினையும் இல்லாமல் பார்த்துக்கொள்கிறோம். அதேபோல ஏற்கெனவே பணிபுரிகிற ஆசிரியர்களுக்கு கூடுதலாக வகுப்புகள் ஒதுக்கப்படுவதில்லை. அவர்கள், அவர்களுடைய பணியை சரியாகச் செய்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 82, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS

82—

மருத்துவ ஊர்தி

***33698—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் நடமாடும் மருத்துவ ஊர்தி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு சட்டமன்றத் தொகுதியில். திருக்கழுக்குன்றத்தில் ஓர் அரசு தாலுகா மருத்துவமனையும், நிரம்பூர், வள்ளிபுரம், கேளம்பாக்கம், செம்பாக்கம் மற்றும் திருப்போரூர் ஆகிய பகுதிகளில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும், மேலும் மாமல்லபுரம் மற்றும் மரக்காணம் ஆகிய பகுதிகளில் அரசு மருத்துவமனைகளும், செங்கற்பட்டு நகரில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் அமைந்துள்ளதாலும், போக்குவரத்து வசதி தேவைக்கேறப அமைந்துள்ளதாலும், திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் நடமாடும் மருத்துவ ஊர்தி வழங்குவது குறித்த அவசியம் எழவில்லை.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வினா எண் 83, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

83—

மகளிர் சுய உதவிக் குழுக்கள்

***32822—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், சேரி ஊராட்சியில் கீழ்க்கண்டமங்கலத்திலுள்ள 15 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கூட்டம் நடத்துவதற்கு அரசு கட்டடம் கட்டித் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், சேரி ஊராட்சியில் கீழ்க்கண்டமங்கலத்தில் உள்ள 15 மகளிர் சுய உதவிக்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS